# போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

## IV-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

**SUPPLEMENT TO PART IV OF THE FORT ST. GEORGE GAZETTE,**

FEBRUARY 28, 1922.

ந. (4) 1.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1922-௵ பெப்ரவரி௴ 28௳. [விலை, 3 பை


## சென்னைச் சட்டநிரூபண சபையாரின் ஆக்ட்.

## ACT OF THE LOCAL LEGISLATURE OF MADRAS.

இந்தியா கவர்ன்மெண்டுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்ட் 81-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கும் நிபந்தனைகளை அனுசரித்து, சென்னைச் சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1922-௵ ஜனவரி௴ 3௳ கவர்னரவர்களாலும், 1922-௵ பெப்ரவரி௴ 8௳ கவர்னர் ஜெனரலவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகிறது :—

### ACT No. II OF 1922.

### 1922-௵த்து 2-வது ஆக்ட்.

**AN ACT TO AMEND THE MADRAS DISTRICT MUNICIPALITIES ACT, 1920, AND THE MADRAS LOCAL BOARDS ACT, 1920.**

1920-௵த்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டையும் 1920-௵த்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டையும் திருத்துவதற்கான ஆக்ட்.

சென்னபட்டணம் 1920-௵த்து 5-வது, 14-வது ஆக்டுகள்.

1920-௵த்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டையும் 1920-௵த்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டையும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிற தென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளையும் லோகல் போர்டுகளையுங் குறித்த 1921-௵த்து (திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

புதிய மியுனிஸிபல் கௌன்ஸிலர்கள செய்ய வேண்டிய பிரமாணம்.

2. (1) யாதொரு மியுனிஸிபல் கௌன்ஸிலின் கௌன்ஸிலராகத் தெரிந்தெடுக்கப்படுகிற அல்லது நியமிக்கப்படுகிற ஒவ்வொரு நபரும் - தம்முடைய ஸ்தானத்தை வகிப்பதற்கு முன்னே, மஹாராஜ சக்ரவர்த்தி அவர்களிடத்தில் தாம் ராஜபக்தியுள்ளவராயிருப்பதாக கௌன்ஸிலின் சபையில் அடியிற்கண்ட நமூனாப்படி பிரமாணம் செய்யவேண்டும் அல்லது உறுதிமொழி கூறவேண்டும்; அதாவது :

ஏ. பி. என்னும் நான் - இந்தக் கௌன்ஸிலில் ஒரு கௌன்ஸிலராக தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதால் / நியமிக்கப்பட்டிருப்பதால், இந்தியா சக்ரவர்த்தி அவர்களாகிய மாட்சிமை தங்கிய மஹாராஜா அவர்களிடத்திலும் அவருடைய வாரிசுகளிடத்திலும் அவருக்குப் பின் பட்டத்துக்கு வருபவர்களிடத்திலும் விசுவாசமுள்ளவனாயிருப்பேனென்றும் உண்மையான ராஜபக்தியுடன் நடந்துகொள்வேனென்றும், நான் செய்ய ஏற்றுக்கொள்ளப்போகும் கடமையை உண்மையாய் நிறைவேற்றுவேனென்றும் பயபக்தியுடன் பிரமாணம் செய்கிறேன் (அல்லது உறுதிகூறுகிறேன்).

(2) யாதொரு நபர் கௌன்ஸிலராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருந்து அல்லது நியமிக்கப்பட்டிருந்து, அவருடைய உத்தியோக கால அளவு ஆரம்பிக்கும் தேதி முதல் மூன்று மாதத்துக்குள்ளாக (1) குறிப்பிட்ட உட்பிரிவில கண்டபடி பிரமாணம் செய்யவோ அல்லது உறுதிமொழிகூறவோ தவறிப்போனால், அவர் - தம்முடைய உத்தியோகத்தை வகிப்பதனின்றும் நீங்கினவராவார்; அதன்மேல், அவருடைய ஸ்தானம் காலியாய்விட்டதாக எண்ணப்படும்.

இப்போதுள்ள மியுனிஸிபல கௌன்ஸிலர்கள் செய்யவேண்டிய பிரமாணம்.

3. (1) யாதொரு மியுனிஸிபல் கௌன்ஸிலுக்குத் தெரிந்தெடுக்கப்பட்டோ அல்லது நியமிக்கப்பட்டோ இருந்து இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கும் காலத்தில் உத்தியோகம் வகிக்கும் ஒவ்வொரு கௌன்ஸிலரும் - இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கின பிறகு தாம் வந்திருக்கும் கௌன்ஸிலின் முதல் சபையிலே, மஹாராஜ சக்ரவர்த்தி அவர்களிடத்தில் தாம் ராஜபக்தியுள்ளவராயிருப்பதாக அடியிற்கண்ட நமூனாப்படி பிரமாணம் செய்யவேண்டும் அல்லது உறுதிமொழி கூறவேண்டும்; அதாவது :—

இந்தக் கௌன்ஸிலில் ஒரு கௌன்ஸிலராயிருக்கும் ஏ. பி. என்னும் நான் - இந்தியா சக்ரவர்த்தி அவர்களாகிய மாட்சிமை தங்கிய மஹாராஜா அவர்களிடத்திலும் அவருடைய வாரிசுகளிடத்திலும் அவருக்குப்பின் பட்டத்துக்கு வருபவர்களிடத்திலும் விசுவாசமுள்ளவனாயிருப்பேனென்றும் உண்மையான ராஜபக்தியுடன் நடந்துகொள்வேனென்றும், நான் கௌன்ஸிலருக்குரிய கடமையை உண்மையாய் நிறைவேற்றுவேனென்றும் பயபக்தியுடன் பிரமாணம் செய்கிறேன் (அல்லது உறுதிகூறுகிறேன்).

(2) தெரிந்தெடுக்கப்பட்டோ அல்லது நியமிக்கப்பட்டோ இருந்து இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கும் காலத்தில் உத்தியோகம வகிக்கிற யாதொரு கௌன்ஸிலர் இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கினது முதல் மூன்று மாதத்துக்குள்ளாக, (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டபடி பிரமாணம் செய்யவோ அல்லது உறுதிமொழி கூறவோ தவறிப்போனால், அவர் - தம்முடைய உத்தியோகத்தை வகிப்பதனின்றும் நீங்கினவராவார்; அதன்மேல், அவருடைய ஸ்தானம் காலியாய்விட்டதாக எண்ணப்படும்.

லோகல்போர்டுகளின் புதிய மெம்பர்கள் செய்யவேண்டிய பிரமாணம்.

4. (1) யாதொரு லோகல் போர்டின் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டாவது நியமிக்கப்பட்டாவது இருக்கிற, அல்லது யாதொரு லோகல் போர்டில் உத்தியோக முறைமையில் மெம்பராகிற ஒவ்வொரு நபரும்-தம்முடைய ஸ்தானத்தை வகிப்பதற்கு முன்னே, மஹாராஜ சக்ரவர்த்தி அவர்களிடத்தில் தாம் ராஜபக்தியுள்ளவராயிருப்பதாக அந்த போர்டின் சபையில் அடியிற்கண்ட நமூனாப்படி பிரமாணம் செய்யவேண்டும் அல்லது உறுதிமொழி கூறவேண்டும்; அதாவது :—

ஏ. பி. என்னும் நான் - இந்த போர்டில் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிற / மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிற / உத்தியோகமுறைமையில மெம்பராயிருக்கிற படியால், இந்தியா சக்ரவர்த்தி அவர்களாகிய மாட்சிமை தங்கிய மஹாராஜா அவர்களிடத்திலும் அவருடைய வாரிசுகளிடத்திலும் அவருக்குப்பின் பட்டத்துக்கு வருபவர்களிடத்திலும் விசுவாசமுள்ளவனாயிருப்பேனென்றும உண்மையான ராஜபக்தியுடன் நடந்துகொள்வேனென்றும், நான் செய்ய ஏற்றுக்கொள்ளப்போகும் கடமையை உண்மையாய் நிறைவேற்றுவேனென்றும் பயபக்தியுடன் பிரமாணம் செய்கிறேன் (அல்லது உறுதி கூறுகிறேன்).

(2) யாதொரு நபர் ஒரு லோகல் போர்டில மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டாவது நியமிக்கப்பட்டாவதிருந்து, அல்லது ஒரு லோகல் போர்டில் உத்தியோக முறைமையிலே மெம்பராயிருந்து, தம்முடைய உத்தியோக கால அளவு ஆரம்பிக்கும் தேதியிலிருந்து

மூன்று மாதத்துக்குள்ளாக (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டபடி பிரமாணம் செய்யவோ அல்லது உறுதிமொழி கூறவோ தவறிப்போனால், அவர் - தம்முடைய உத்தியோகத்தை வகிப்பதனின்றும் நீங்கினவராவார் ; அதன்மேல், அவருடைய ஸ்தானம் காலியாய்விட்டதாக எண்ணப்படும்.

லோகல் போர்டுகளில் இப்போதுள்ள மெம்பர்கள் செய்யவேண்டிய பிரமாணம்.

5. (1) இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் உத்தியோகம் வகிக்கும் யாதொரு லோகல் போர்டைச் சேர்ந்த ஒவ்வொரு மெம்பரும் - இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கின பிறகு தாம் வந்திருக்கும் ஷை போர்டின் முதல் சபையிலே, மஹாராஜ சக்ரவர்த்தி அவர்களிடத்தில் தாம் ராஜபக்தியுள்ளவராயிருப்பதாக அடியிற்கண்ட நமூனாப்படி பிரமாணம் செய்யவேண்டும் அல்லது உறுதிமொழிகூற வேண்டும் ; அதாவது :—

இந்த போர்டின் மெம்பராகிய எ. பி. என்னும் நான் - இந்தியா சக்ரவர்த்தி அவர்களாகிய மாட்சிமை தங்கிய மஹாராஜா அவர்களிடத்திலும் அவருடைய வாரிசுகளிடத்திலும் அவருக்குப்பின் பட்டத்துக்கு வருபவர்களிடத்திலும் விசுவாசமுள்ளவனாயிருப்பேனென்றும் உண்மையான ராஜபக்தியுடன் நடந்துகொள்வேனென்றும், நான் ஒரு மெம்பருக்குரிய கடமையை உண்மையாய் நிறைவேற்றுவேனென்றும் பயபக்தியுடன் பிரமாணம் செய்கிறேன் (அல்லது உறுதிகூறுகிறேன்).

(2) இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கும் காலத்தில் உத்தியோகம் வகிக்கும் யாதொரு லோகல் போர்டைச் சேர்ந்த எந்த மெம்பராவது இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கினது முதல் மூன்று மாதத்துக்குள்ளாக, (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டபடி பிரமாணம் செய்யவோ அல்லது உறுதிமொழி கூறவோ தவறிப்போனால், அவர் - தம்முடைய உத்தியோகத்தை வகிப்பதனின்றும் நீங்கினவராவார் ; அதன்மேல், அவருடைய ஸ்தானம் காலியாய்விட்டதாக எண்ணப்படும்.

ஆர். ராமசந்திர ராவ்,
கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி,
லா (லெஜிஸ்லெடிவ்) டிபார்ட்மென்ட்.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
*Tamil Translator to Government.*

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.